சட்டம் ஒழுங்கை பராமரித்துக் கொண்டிருக்கிறோம். அது மட்டும் அல்ல. இன்றைக்கு ஒரு அறிவிப்பு. ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு ஜீப் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். ஊருக்கு ஒன்று கொடுக்கும்போதே நம்முடைய காவல் துறையினர் மிடுக்காக சென்று கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு ஜீப் என்று சொன்னால் நிச்சயமாக நம்முடைய காவல் துறை ஸ்காட்லேண்ட் காவல் துறைக்கு நிகராக இன்றும் என்றும் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இன்றைக்கு தமிழ்நாடு முன்னேற வேண்டும், தமிழக மக்கள் முன்னேற வேண்டும் என்று இன்றும் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிற நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து ஆளுநருடைய உரையிலே பேசுகின்ற நல்வாய்ப்பினை நல்கியதற்காக நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. தண்டாயுதபாணி (குறுக்கீடு)

8. தங்களுக்குப் பேசும் வாய்ப்பை கொறடா அளிக்கவில்லையென காங்கிரஸ் கட்சி உறுப்பினர் முறையீடு குறித்து பேரவைத் தலைவரின் அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் 6 சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பேரவையிலே மக்களுடைய பணிகளை ஆற்றுவதற்காக எங்கள் தொகுதியினுடைய மக்கள் பிரச்சினைகளை சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்வதற்கும் பணிகளை ஆற்றுவதற்கும் முடியாமல் இருக்கிறோம். காரணம் எங்களுடைய கட்சியினுடைய கொறடா எங்கள் 6 பேருக்கும் சுமார் 2 வருடங்களாகவே வாய்ப்பு தருவது இல்லை. அந்த வாய்ப்பு தராத நேரத்தில் எங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, இந்தச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் தங்களுக்கு தான். இந்தச் சட்டமன்றம் குறுகிய இடமாக இருந்தாலும் வானளாவிய அதிகாரத்தைப் பெற்றவர்கள் தாங்கள். எல்லா அதிகாரத்தையும் ஒருங்கே

வைத்திருக்கின்ற தாங்கள் தான், அவர்கள் எங்களை அனுமதிக்காவிட்டாலும், எங்களுடைய தனி உரிமையை பாதுகாக்கின்ற வகையில், நீங்கள் எங்களை அனுமதித்து எங்களுக்கு பேச வாய்ப்பு கொடுக்க வேண்டும். அதுதான் எங்களுடைய குறை. அந்தக் குறையைத்தான் தாங்கள் தயவுசெய்து, பரிசீலனை செய்து எங்கள் 6 பேரையும் பேச அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏற்கனவே காலையில் என்னிடத்திலே இதை எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கிறீர்கள். பொதுவாக கட்சியினுடைய உறுப்பினர்கள் 'கொறடாக்கள் எங்களை பேசவிடுவது இல்லை' என்கிற குறைபாடுகளை என்னிடத்திலே வந்து சொல்வது உண்டு. நான் உடனடியாக சம்பந்தப்பட்ட கட்சிகளுடைய கொறடாக்களை அழைத்து, எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு வருவதைப் போல பார்த்துக் கொள்ளுங்கள் என்று நான் கூறுவது உண்டு. இது காங்கிரஸ் கட்சி என்று மட்டும் அல்ல, ஆளும் கட்சியிலிருந்து கூட சில உறுப்பினர்கள் என்னிடத்திலே வந்து முறையிடுவார்களேயானால் நான் கொறடாவிடத்திலேதான் சொல்வது உண்டு. அதைப்போல நீங்கள் சொல்லியதை--கொறடாவுக்கு ஏற்கெனவே எழுத்து மூலமாகக் கொடுத்ததைக் கொடுத்திருக்கிறேன். அதைப்போல இன்று அவையின் மூலமாகவும் கேட்டுக் கொள்கிறேன். எந்த உறுப்பினருக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்குமேயானால் அந்த உறுப்பினர்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு பேரவைத் தலைவருக்குத் தான் உண்டு. எனவே அந்தக் கொறடாக்களுக்கு நான் தெரிவித்திருக்கிற அறிவுரைகளையும் மீறி வாய்ப்புக் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்ற நிலைமை வருமேயானால் அந்த நேரத்தில் பேரவைத் தலைவர் தலையிட வேண்டியிருக்கும். எனவே அந்தக் கட்சிக் கொறடாக்களுக்கு இப்பொழுதே கூட தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது என்ற நிலைமையைப் பார்க்க வேண்டியது கொறடாக்களின் பொறுப்பு. அப்படிக் கொடுக்கவில்லை என்ற நிலைமை தொடர்ந்து வருமேயானால் பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் பாதுகாப்புக்கு வர வேண்டி வரும். அந்த நிலையில் நான் அதற்கு நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.